# திருப்பத்தூர் நகராட்சி

# 2010–2011–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1) அமைப்பும் நிர்வாகமும்

நடப்பு ஆண்டில் இந்நகர மன்றத்தின் எல்லையில் யாதொரு மாறுதல் இல்லை இந்நகர மன்றம் 1886–ம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

### அ) அமைப்பு

1 பரப்பளவு 4.66 ச.கி. மீட்டர்

## 2) மக்கள் தொகை

1981–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 52,441 மக்கள் தொகை கொண்டதாகும், 1991–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 55,282 ஆக இருந்தது 2001–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி (ஆண் 30673 + 30203) = 60876 ஆக உயர்ந்துள்ளது. மேலும் தற்போது நடைப்பெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011–ன்படி
(ஆண் 31910+பெண் 32062+திருநஙகையர்–2) = 63974 ஆக உள்ளது.

## 3) இந்நகராட்சியின் தகுதி

இந்நகராட்சி மூன்றாம் நிலையில் இருந்து அரசாணை எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை (எம்.எஸ்) 194 நாள் 10.02.1970–ன்படி 2–ம் நிலைக்கு உயர்த்தப்பட்டது. பின்னர் (நகர மன்ற தீர்மானம் எண் 626, நாள் 24.02.1970) 16.04.77–ம் தேதி ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை 654–ன்படி இரண்டாம் நிலையிலிருந்து 01.04.1977–ம் தேதியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை அரசாணை எண் 238 நாள் 02.12.2008–ன்படி இந்நகராட்சி முதல் நிலையிலிருந்து 02.12.2008 முதல் தேர்வுநிலை நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது.

1981–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 28 வார்டுகளாக பிரிக்கப்பட்டு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை 25.05.1983–ம் தேதிய 754 எண் உத்திரவில் அங்கீகரிக்கப்பட்டது. 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 33 வார்டுகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டு 33 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது மேற்படி 33 வார்டுகளுக்கும் அக்டோபர் 2006–ல் நகரமன்ற தேர்தல் நடைபெற்றது.

## 4) நிர்வாக அலுவலர்கள் அறிக்கை ஆண்டில்

திருமதி. பெ. விஜயலட்சுமி, பி.ஏ., 01.04.2010 முதல் 31.03.2011 வரை
ஆணையாளர்

## 1) பொறியாளர் :

அறிக்கை ஆண்டில் கீழ் கண்ட பொறியாளர் பணியாற்றி வந்துள்ளார்.

திரு. ஆர். இராமசாமி, பி.இ.,
பொறியாளர் .. 01. 04. 2010 முதல் 31.03.2011 வரை

## 2) துப்புரவு அலுவலர்:

1. திரு. மு. தமிழ்செல்வன்
   துப்புரவு அலுவலர் .. 01.04.2010 முதல் 31.03.2011 வரை

## 3) நகரமைப்பு அலுவலர்

1. திரு. ஆர். பாஸ்கர், நகரமைப்பு அலுவலர் .. 01.04.2010 முதல் 10.06.2010 வரை
   ( காலியிடம்) .. 11.06.2010 முதல் 31.02.2010 வரை

## 4) மேலாளர்

திரு. நா. அன்புமணி
மேலாளர் .. 01.04.2010 முதல் 31.03.2011 வரை

## 5) நகர் மன்ற தலைவர்

திருமதி. டி. சொக்கம்மாள் துளசிநாதன் அவர்கள் 01.04.2010 முதல் 31.03.2011 வரை நகரமன்ற தலைவர் பதவி வகித்து வருகிறார்.

## 6) மன்ற நடவடிக்கைகள்:–

அறிக்கையாண்டில் நகரமன்றத் தலைவர் அவர்களால் 12 முறை கூட்டங்கள் கூட்டப்பட்டது. அவைகளில் 8 சாதாரண கூட்டங்களும் 3 அவசரக் கூட்டமும், மற்றும் ஒரு சிறப்பு கூட்டமும் ஆகும். அவைகளில் மொத்தம் 381 பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பொருட்கள் மீதும் முடிவெடுக்கப்பட்டது.

## 7) குழுக்கள்

நடப்பு ஆண்டில் கீழ் குறிப்பிட்ட குழுக்கள் 01.04.2010 முதல் 31.03.2011 வரை செயல்பட்டு குழுக் கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

| வ.எண் | குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | நியமனக்குழு | 1 | 1 |
| 2 | ஒப்பந்தக்குழு | – | – |
| 3 | உள்ளூர் திட்டக்குழுமம் | 1 | 4 |

## 8) நிர்வாகம்

நிர்வாக செலவு நடப்பு ஆண்டில் மேலாட்சிப் பணியாளர்கள் சம்பளம் ரூ.1,12,46,172.00 தண்டல் பணியாளர்கள் சம்பளம் ரூ. 29,32,956.00ஆகும். படிவஙகள் அச்சடிக்கவும் நமூனாக்கள் வாஙகவும் பதிவேடுகள் மற்றும் அஞ்சல் வில்லைகள் வாஙகவும் செலவான தொகை ரூ. 2,30,000.00ஆகும்.

# 2010–2011–ம் ஆண்டில் தொடர்ந்த வழக்குகள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு துவக்கத்தில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகள் | .. | 33 |
| 2 | நடப்பு ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | .. | 7 |
| 3 | நகராட்சியின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள் | .. | 40 |
| 4 | மொத்தம் | .. | 40 |
| 5 | முடிவு பெற்ற வழக்குகள் | .. | 5 |
| 6 | ஆண்டு இறுதியில் முடிவு பெறாமல் நின்ற வழக்குகள் | .. | 35 |

## பணியாளர்கள்

**பொறியியல் பிரிவில், கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.**

| | | |
|---|---|---|
| பொறியாளர் | .. | 1 |
| பணி மேற்பார்வையாளர் | .. | 1 |
| பணி ஆய்வர் | .. | 1 |
| மின் பணியாளர் நிலை–2 | .. | – |
| மின் கம்பியாளர் | .. | 2 |
| மின் கம்பி உதவியாளர்கள் | .. | 2 |
| ஓட்டுநர் | .. | – |
| பூஙகா காவலர் | .. | 2 |
| சாலை பராமரிப்பு மஸ்தூர் | .. | 1 |

| | | |
|---|---|---|
| பேருந்து நிலைய காவலர் | .. | 1 |
| **குடிநீர் பிரிவில்** | | |
| உதவிப்பொறியாளர் | .. | 1 |
| மின் கண்காணிப்பாளர் நிலைய –1 | .. | – |
| குழாய் பொருத்துனர் | .. | 1 |
| மீட்டர் ரீடர் | .. | 1 |
| மின் பணியாளர் நிலை–2 | .. | – |
| ஓட்டுநர்கள் | .. | 2 |
| காவலர்கள் | .. | 3 |
| குழாய் திருப்புனர் | .. | 1 |

பொதுப்பணி பணியாளர்களின் ஆண்டு மொத்த செலவு .. ரூ. 449.51 இலட்சம்

குடிநீர் பிரிவு பணியாளர்களின் ஆண்டு மொத்த செலவு .. ரூ.32.65 இலட்சம்

## 9) பாலஙகள் பாதைகள் ஓடைத்துறை முதலியன:-

இந்நகர எல்லைக்குள் மூன்று சாலைகள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகர மன்றத்தால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 57.081 கிலோ மீட்டர்களாகும்.

1. இந்நகராட்சியினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் விவரம் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| தார் சாலை | .. | 31.431 |
| சிமெண்ட் சாலை | .. | 23.710 |
| கருங்கல் பலகை சாலை | .. | – |
| இதர சாலை | .. | 1.940 |
| மொத்தம் | .. | 57.081 |

## ஆ) பாலஙகள் ஓடைத்துறை முதலியன :-

இந்நகரில் பெரிய பாலஙகள் ஓடைத்துறைகள் ஒன்றுமில்லை

1. நகராட்சி பராமரிப்பில் இருந்து ஆழ்துளை கிணறுகள் (கைபம்பு) .. 224
2. பவர் பம்பு .. 145

## 2) கருவிகளும் தளவாடஙகளும் :-

இந்நகர மன்றத்திற்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்காணும் வாகனஙகள் மூலம் நகரத்திலுள்ள எல்லா பகுதிகளிலிருந்தும் குப்பைகளை உர கிடஙகிற்கு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | T.N. 23 W 0452 TN 23W 1978 | .. | டிராக்டர் |
| 2 | T.N. 23 W 3873 | .. | அசோக் லைலண்டு லாரி |
| 3 | T.N. 23 W 4597 | .. | கழிவுநீர் ஊர்தி |
| 4 | T.N. 23 Y 2067 | .. | மின் லாரி |
| 5 | T.N. 23 W 9515 | .. | மின் லாரி |
| 6 | T.N. 23 K 2292 | .. | பவர் டில்லர் |
| 7 | T.N. 23 K 2293 | .. | பவர் டில்லர் |
| 8 | T.N. 23 K 2295 | .. | பவர் டில்லர் |
| 9 | T.N. 23 K 2296 | .. | பவர் டில்லர் |
| 10 | TN 23 AW 3920 | .. | மினி லாரி |
| 11 | TN 23 AW 3921 | .. | மின் லாரி |
| 12 | TN 23 BW 2370 | .. | ஈப்பு |
| 13 | TN 23 W 4597 | .. | டம்பர் பிளேசர் லாரி |

மேலும் கலவை உர விற்பனை மூலம் நடப்பு ஆண்டில் வருவாய் ஏதுமில்லை. இவைகள் தவிர பொறியியல் பிரிவில் கீழ்காணும் இரு வாகனங்கள் (பவர் டில்லர்) மூலமும் சத்துணவுக் கூடங்களுக்கும் குடிநீர் கிடைக்காத இடங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | TDJ. 8532 | .. | பவர் டில்லர் |
| 2 | TDJ.8533 | .. | பவர் டில்லர் |
| 3 | TDJ.3050 | .. | மகேந்திரா மற்றும் மகேந்திரா ஈப்பு கழிவுச் செய்ய நடவடிக்கையில் உள்ளதுது |
| 4 | T.N. 23 Z 0139 | .. | மகேந்திரா மார்சல் ஈப்பு |
| 5 | T.N. 23 P 8444 | .. | மகேந்திரா பொலிரோ |

## 2010–2011–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் :-

*****

### 1) பகுதி –II திட்டம் 2010–2011

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண் 52413/பி2/09–6 நாள் 01.06.2010 எண்ணிட்ட செயல்முறையின்படி ரூ.10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 22–ல் உள்ள சக்தி நகர் 2–வது தெரு மற்றும் 2–வது குறுக்கு சந்தில் கருங்கல்லி சாலையில் சிமெண்ட் சாலையாக மாற்றும் பணி. | 2.50 | 2.50 | பணி முடிக்கப்பட்டது |
| 2 | வார்டு எண் 03–ல் உள்ள எஙகியா லே – அவுட் (கோவிலூர் ரோடு ) கருஙகல் சாலையில் சிமெண்ட் சாலையாக மாற்றும் பணி. | 1.15 | 0 | பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 3 | வார்டு எண் 01–ல் உள்ள தென்றல் நகர் மற்றும் இரட்டைமலை சீனிவாசன்பேட்டையில் கருஙகல்லி சாலையில் சிமெண்ட் சாலையாக மாற்றும் பணி. | 3.60 | 3.60 | பணி முடிக்கப்பட்டது |
| 4 | வார்டு எண் 01–ல் உள்ள தென்றல் நகர் மற்றும் இரட்டைமலை சீனிவாசன்பேட்டையில் கருஙகல்லி சாலையில் தார் சாலையாக மாற்றும் பணி. | 3.40 | 0 | முடிவுறும் தருவாயில் உள்ளது |

## *2010–2011 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் :-*

மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்களின் அ7/1080/2010/ நாள் 16.06.2010 எண்ணிட்ட செயல்முறையின்படி ரூ.2.00 லட்சம் நிதி ஒதுக்கீடுச் செய்யப்பட்டு கீழ்காணும் இரு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 22–ல் சிமெண்ட் சாலை அமைக்கும் | 1.00 | 1.00 | பணி முடிவுற்றது |
| 2 | வார்டு எண் 14–ல் சிமெண்ட் சாலை அமைக்கும் | 1.00 | 1.00 | பணி முடிவுற்றது |

## 2010–2011–ம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் 16.06.2010 தேதிய ந.க.எண் அ7/1080/2010 எண்ணிட்ட செயல்முறைகளின்படி, கீழ்காணும் ஒன்பது பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 23 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| 2 | வார்டு எண் 27 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 3.00 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |
| 3 | வார்டு எண் 27 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 3.00 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வார்டு எண் 22 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 1.90 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |
| 5 | வார்டு எண் 6 சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| 6 | வார்டு எண் 5–ல் நியாய விலை கட்டிடம் கட்டும் பணி | 2.00 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |
| 7 | வார்டு எண் 7–ல் நியாய விலை கட்டிடம் கட்டும் பணி | 1.90 | 1.90 | பணி முடிவுற்றது |
| 8 | வார்டு எண் 25–ல் உள்ள மையம் எண் 10 அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 2.63 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |
| 9 | வார்டு எண் 30–ல் உள்ள மையம் எண் 8 அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி | 2.63 | 0 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது |

## <u>2010–2011 இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி (O.& M Gap filling fund 2010-2011)</u>

மூன்றாவது மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி (O.& M Gap filling fund 2010-2011)-ன் கீழ் இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தினை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 51912/ப்பி3 /2010 – 2 நாள் 08.11.2010–ல் ரூ.60.40 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையில் நகரமன்ற தீர்மானம் எண் 240, நாள் 19.02.2010–ல் பதிவு செய்து கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் சிமெண்ட் தளம் அமைத்து கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 27.00 | 11.00 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடம் கட்டும் பணி | 24.90 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனஙகள் நிறுத்தும் அமைவிடம் அமைக்கும் பணி. | 8.50 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

## 2010–2011 இயற்கை இடர்பாடுகள் (Natural Calamities – North East Monsoon 2010 )

இயற்கை இடர்பாடுகள் 2010 கீழ் சிமெண்ட் சாலை மற்றும் தார் சாலை பணிகள் **Natural Calamities – North East Monsoon 2010** மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம்ந.க.எண் 41696/2010/இ2/ நாள் 14.01.2011–ல் ரூ.167.78 லட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டத்தின் அடிப்படையில் நகரமன்ற தீர்மானம் எண் 250, நாள் 17.02.2011–ன் படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஆரித்தெரு, பாலம்மாள் காலனி மெயின் ரோடு மற்றும் திரு.வி.க. ரோடு, கச்சேரி தெரு, பதுப்பேட்டை ரோடு 4–வது தெரு, காமராஜ்நகர் மெயின் ரோடு மற்றும் இணைப்பு சாலை மற்றும் சின்னகுளம் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் பயன்படுத்தி தார்சாலைகள் அமைத்தல் | 19.95 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | சக்தி நகர் 1வது தெரு, லண்டன் மிசன் ரோடு, விசிஎம் தெரு, பீராளம் அப்துல் குத்தூஸ் தெரு, அனுமந்த உபாசாகர்பேட்டை, ஆஜ்மியான் தெரு, கோவிலுார் ரோடு, தென்றல் நகர் மெயின் ரோடு, இரட்டைமலை சீனிவாசன் பேட்டை மெயின் ரோடு, இரட்டைமலை பேட்டை 2வது தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் பயன்படுத்தி தார்சாலைகள் அமைத்தல் | 27.37 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 3 | அரசு பூஙகா சாலைகள் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 17.81 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | மீனாட்சி தியேட்டர் பக்கம், கருத்தப்பர் தெரு, தஞ்சையம்மன் கோயில் தெரு, அப்துல் மாலிக் தெரு, துவாரக பிள்ளையார் கோயில் தெரு, டி.பி.பூரான் தெரு, பஜார் தெரு, சேர்மன் ரஙகநாதன் தெரு, துரைசாமியார் தெரு, ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 13.70 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 5 | கான் தெரு, அப்பாய் தெரு, வடக்கு முத்தப்பர் தெரு, புதுப்பேட்டை ரோடு 2வது தெரு, கெளதமபேட்டை, சிகேசி தியேட்டர் பின்புறம், பீராம்பேட் சோட்டாபாய் தெரு, ராமக்கா பேட்டை ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 18.10 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 6 | இரட்டைமலை சீனிவாசன்பேட்டை 2வது தெரு, நியூ சினிமா தியேட்டர் பின்புறம், சக்தி நகர் 1வது தெரு மற்றும் டபேதார் முத்துசாமி தெரு குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 25.75 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 7 | ஜின்னா ரோடு 3வது தெரு முதல் ஏரிக்கரை ரோடு, தர்கா தெரு, குலாம் ரசூல் தெரு, மாத்தரான் அப்துல் காதர் தெரு, தண்டபாணி கோயில் தெரு மற்றும் பாவடி தோப்பு ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 18.80 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | சாமநகர் மெயின் ரோடு, எல்லம்மன் கோயில் தெரு, அல்லா பகஷ் ரோடு, ராஜன் தெரு மற்றும் மருத்துவர் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 26.30 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |

<u>**2010–2011 சிறப்பு சாலைகள் திட்டம் (Special Roads Programme 2010-2011**</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீர் அமைத்திட சிறப்பு சாலைகள் திட்டம் 2010–2011–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண் 25910/2010/இ3/ நாள் 18.09.2010–ல் ரூ.272.64 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையில் நகரமன்ற தீர்மானம் எண் 129 நாள் 30.08.2010–ன்படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | செலவினம் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 31 மற்றும் 32–ல் சேலம் கிருஷ்ணகிரி பை – பாஸ் சாலையில் தார் அமைக்கும் பணி | 52.50 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2 | வார்டு எண் 3–ல் எக்கியா லோ – அவிட் சாலையில் தார் அமைக்கும் பணி | 30.00 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | வார்டு எண் 13–ல் தண்டபாணி கோவில் தெருவில் தார் அமைக்கும் பணி | 9.50 | 9.50 | பணி முடிவுற்றது |
| 4 | வார்டு எண் 13–ல் சண்முகனார் தெருவில் தார் அமைக்கும் பணி | 3.70 | 3.70 | பணி முடிவுற்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண் 9–ல் ஜின்னாரோடு 3–வது தெரு முதல் கோட்டை ஈஸ்வரன் கோவில் தெரு வரை தார் அமைக்கும் பணி | 2.35 | 2.35 | பணி முடிவுற்றது |
| 6 | வார்டு எண் 11–ல் வரதராஜா பெருமாள் கோவில் தெருவில் தார் அமைக்கும் பணி | 1.65 | 1.65 | பணி முடிவுற்றது |
| 7 | வார்டு எண் 4–ல் பிள்ளையார் கோவில் தெருவில் தார் அமைக்கும் பணி | 1.30 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 8 | வார்டு எண் 22–ல் பாரதியார் தெருவில் தார் அமைக்கும் பணி | 1.05 | 1.05 | பணி முடிவுற்றது |
| 9 | வார்டு எண் 25–ல் சின்னமதார் தெருவில் தார் அமைக்கும் பணி | 1.20 | 1.20 | பணி முடிவுற்றது |
| 10 | வார்டு எண் 14–ல் தர்மராஜா கோவில் தெருவில் தார் அமைக்கும் பணி | 0.80 | 0.80 | பணி முடிவுற்றது |
| 11 | வார்டு எண் 5–ல் பொன்னியம்மன் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 17.10 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 12 | வார்டு எண் 5–ல் வி.சி.எம். தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 3.29 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 13 | வார்டு எண் 25–ல் வெள்ளைவாய்கால் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 31.95 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 14 | வார்டு எண் 25–ல் காதர் மொய்தீன் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 7.25 | 7.25 | பணி முடிவுற்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | வார்டு எண் 25–ல் சந்தமியான் 2–வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.40 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 16 | வார்டு எண் 8–ல் சி.கே.சி. நகர் பிரதான சாலையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 7.25 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 17 | வார்டு எண் 19–ல் சிவனார் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.00 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 18 | வார்டு எண் 22–ல் சாமி செட்டித் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.10 | 5.10 | பணி முடிவுற்றது |
| 19 | வார்டு எண் 21–ல் குமாரசாமி கோவில் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.00 | 5.00 | பணி முடிவுற்றது |
| 20 | வார்டு எண் 23–ல் அப்துல் மாலிக் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 4.10 | 4.10 | பணி முடிவுற்றது |
| 21 | வார்டு எண் 28–ல் காந்தி நகர் 5–வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 3.85 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 22 | வார்டு எண் 5 –ல் டபேத ார் முத்துசாமி 1–வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2.95 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 23 | வார்டு எண் 4– ல் கஸ்தூரிபாய் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2.85 | 2.85 | பணி முடிவுற்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | வார்டு எண் 21 –ல் அண்ணாமலையார் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 26.15 | 26.15 | பணி முடிவுற்றது |
| 25 | வார்டு எண் 5–ல் பெரிய குளம் மேட்டு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 11.33 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 26 | வார்டு எண் 11–ல் டி.எம். சுலைமான் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 6.30 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 27 | வார்டு எண் 31–ல் அண்ணா நகர் 2–வது, 3–வது தெரு மற்றும் 4–வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 6.30 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 28 | வார்டு எண் 3–ல் புதிய சிவராஜ்பேட்டை, போஸ்கோ நகர், ஆகிய தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 6.05 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 29 | வார்டு எண் 21–ல் காளியம்மன் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.97 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 30 | வார்டு எண் 3 –ல் அம்பேத்கார் நகர் பிரதான 3–வது தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.40 | 0 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

## குடிநீர் திட்டம் 2008–2009

அரசசணை நிலை எண் 463 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள் 17.11.2006–ன்படி யு.ஐ.டி.எஸ்.எம்.டி. திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்காக ரூ.648.00 இலட்சம் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்று படுகையிலிருந்து குடிநீரினை எடுக்கவும் இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலமாக ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு தற்பொழுது பணி முடிக்கப்பட்டு 01.03.2009 முதல் குடிநீர் பெறப்பட்டு வருகிறது.

## 2. மின் விளக்குகள்

நடப்பு ஆண்டில்1861 மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெரு விளக்குக

| | | | |
|---|---|---|---|
| 1 | 4' அடி குழல் தெரு விளக்குகள் | .. | 1239 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | .. | 487 |
| 3 | மெட்டல் ஹாலைடு | .. | 125 |
| 4 | உயர் கோபுர மின் விளக்கு | .. | 10 |
| 5 | மொத்தம் | .. | 1861 |

நடப்பு ஆண்டில் தெரு விளக்குகள் மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவு ரூ. 5780000 செலுத்தப்பட்டது.

## 10) ஆரம்பக் கல்வி :-

இந்நகராட்சியின் எல்லைக்குள் அறிக்கை ஆண்டில் எல்லா கல்வி நிறுவனஙகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரப்படி பள்ளி செல்ல வேண்டிய வயது வந்த குழந்தைகளின் உத்தேச எண்ணிக்கை 23322 அதில் மாணவர்கள் 9350 ஆகவும் மாணவிகள் 13972 ஆகவும் இருந்தது. இந்த நககாட்சி எல்லைக்குள் பள்ளி செல்ல வேண்டிய குழந்தைகளின் எல்லா ஆரம்ப பாடசாலைகளிலும் கல்வி பயிலும் குழந்தைகளின் உத்தேச எண்ணிக்கை 1661 ஆகும். இதில் மாணவர்கள் 879 மாணவிகள் 782 ஆகும்.

அறிக்கை ஆண்டில் இறுதியில் இருந்த பள்ளிகளின் எண்ணிக்கையும் அவற்றில் கல்வி பயின்று வந்தவர்களின் எண்ணிக்கையும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இருந்தன.

| | நகராட்சி பள்ளியின் எண்ணிக்கை | கல்வி பயின்றவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1) ஆண்டு இறுதியில் | | |
| 2) நகராட்சியின் பாடசாலைகளில் கல்வி பயின்று வந்த குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் | 11 | 1012 |

## முதியோர் கல்வி திட்டம் :

அறிக்கை ஆண்டில் நகராட்சியினரால் முதியோர் கல்வி நிலையம் ஏதும் நிர்வகிக்கப்படவில்லை.

## 11) எண்ணிக்கையும் திறமையும்:-

முந்தைய ஆண்டுகளில் நகராட்சியில் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கை 11 ஆகும். அதில் முகம்மதியர் வாழும் பகுதியில் உள்ளதும் உருது மொழியில் பாடம் போதிக்கும் பள்ளிகள் நான்கு ஆகும்.

நகராட்சி துவக்கப்பள்ளிகளில் படிக்கும் மாவண / மாணவியரின் மொத்த எண்ண்கை 31.03.2011–ல் உள்ளபடி 917 அதில் மாணவர்கள் 454 மாணவிகள் 463 ஆகும். மாணவர்களின் சராவரி வருகை 85 சதவீதம் ஆகும். அனைத்து நகராட்சி பள்ளிகளிலும் போதனை இலவசமாக போதிக்கப்பட்டது. எல்லா பள்ளிகளிலும் வகுப்பு வாரியாக ஆண் பெண் மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 63 | 65 | 128 |
| 2 | 81 | 88 | 169 |
| 3 | 104 | 103 | 207 |
| 4 | 85 | 82 | 167 |
| 5 | 121 | 125 | 246 |
| மொத்தம் | 454 | 463 | 917 |

நகர அனைத்து துவக்கப் பள்ளிகளிலும் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிரின குழந்தைகளுக்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் 1–வது வகுப்பு முதல் 5–ம் வகுப்பு வரையில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதி வகுப்பைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் அரசு செலவில் இலவச புத்தகங்கள் வழங்கப்பட்டது. நகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் 10 பள்ளிகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களிலும், ஒரு பள்ளி வாடகை கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ. 1000.00ஆகும்.

# 2 உயர் நிலைக்கல்வி

## 12) இடமும் எண்ணிக்கையும்:-

இந்நகரில் நகராட்சியால் உயர்நிலைப்பள்ளி ஏதும் பராமரிக்கப்படவில்லை. ஆனால் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், அரசால் பராமரிக்கப்படுகிறது. இது தவிர தனியார் நிறுவனங்களால் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டும், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டும் நடத்தப்பட்டு வருகிறது.

## 13) சிறப்பு பணியும் பொது நூலகங்களும் :-

இந்நகர எல்லைக்குள் கத்தோலிக்கரின் சலேஷியன் மிஷன் தூய நெஞ்சக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மேரிஇமாகுலேட் கான்வென்ட் பெண்களுக்காக ஒரு ஆசிரியை பயிற்சிப் பள்ளியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். உள்ளாட்சி நூலக ஆணையக்குழு பொது நூலகம் ஆகியவற்றினை தொடர்.து சிறப்பாக நடத்தி வருகின்றனர். மேலும் ஒய்.எம்.சி.ஏ. நிறுவனத்தினரால் முதலுதவி பயிற்சி பாடங்களும் கற்பிக்கப்பட்டு சான்று வழங்கப்பட்டு வருகின்றது. இந்நகராட்சி மன்றம் நடத்திய 11 ஆரம்ப பள்ளிகளை கல்வித்துறையின் 09.03.1990 முதல் தேதிய அரசாணை எண் 347 எண்ணுள்ள ஆணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் 12.04.1990–ந் தேதிய ந.க.எண் 6616/89/ஜி1, எண்ணுள்ள சுற்றறிக்கையின்படி ஆசிரியர்களை 01.04.1990 முதல் அரசினரின் கல்வித்துறைக்கு நகராட்சியிலிருந்து மாற்றப்பட்டு ஆசிரியர்கள் கடைசி ஊதியச் சான்றுடன் விடுவிக்கப்பட்டனர். பள்ளிக் கூடங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது தற்போது நகராட்சி வசம் உள்ளது.

## 14) இட வசதியும் உபகரணஙகளும் :-

நகரமன்ற ஆரம்பப் பள்ளிகள் 11–ல் 10 பள்ளிகள் நகராட்சி கட்டிடஙகளிலும், ஒரு பள்ளி வாடகை கட்டிடத்திலும் நடைபெற்று வந்தன. ஆசிரியர்களை அரசாஙக ஆசிரியர்களாக மாற்றப்பட்டாலும் வாடகை கட்டிடம் ஒன்றைத் தவிர மற்ற 10 கட்டிடஙகளையும் நகராட்சியே தொடர்ந்து பராமரித்து வருகிறது. வாடகை கட்டிடத்திற்கு தொடர்ந்து மாத வாடகை ரூ.1000/– கொடுக்கப்பட்டு வருகிறது.

## 15)ஆரம்ப கல்வி நிதி:-

நகரமன்ற எல்லைக்குள் கட்டிடஙகளின் வருட வாடகை மதிப்பின்பேரில் அரையாண்டிற்கு சொத்துவரியுடன் கல்வி வரியாக 10% சதவிகிதமும் காலியிடஙகளில் சொத்து மதிப்பில் கல்வி வரியாக 10% சதவிகிதமும் அரையாண்டிற்கு விதிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் இதில் வரியாக கிடைத்த மொத்தம் ரூ. 17,79,620/– ஆகும்.

# பொது நலம்

## மருத்துவ உதவி:-

இந்நகர மன்றம் தாய் சேய் நல விடுதி தவிர யாதொரு மருத்துவ விடுதியும் நடத்துவதில்லை. இந்நகரில் அரசினரால் பொது மருத்துவமனை ஒன்றும், போதிய தகுதியுள்ள தனிப்பட்ட மருத்துவர்களால் அநேக தனியார் மருத்துவமனைகளும் நடத்தப்பட்டு வருகிறது. மருத்துவ உதவி இந்நகரில் போதுமானதாக உள்ளது. காலரா போன்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசினர் மருத்துவ மனையில் தனியாக தடுப்பு பிரிவு காலரா கொட்டகை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## வியாதிஸ்தர்கள் கணக்கு:-

இந்நகராட்சி எந்த ஒரு மருத்துவ மனையையும் நடத்தவில்லை.

## வசதியும் தளவாடஙகளும்:-

இவ்வாண்டில் குப்பைத் அகற்ற ஒரு டம்பர் பிளேசர் லாரியும், 4 மினி லாரியும், ஒரு லாரியும், 2 பவர் டில்லரும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் ஒரு கழிவுநீர் உறிஞ்சும் டிராக்டர் எஞ்சினும் உள்ளது.

# பொது சுகாதாரம்

## 17) அமைப்பு முறையும் பணியாளர்களும்:-

ஒரு துப்புரவு அலுவலர், மூன்று துப்புரவு ஆய்வர்களும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 7 பேரும், மகப்பேறு உதவியாளர்கள் 4 பேரும், ஆயா இரண்டும், 4 ஓட்டுநர்களும், துப்புரவு அலுவலரின் அலுவலக உதவியாளர் ஒருவரும், துப்புரவு தொழிலாளர்கள் 146 பேரும், கொசு ஒழிப்பு திட்டத்திற்காக சாக்கடை சுத்தம் செய்து மருந்து தெளிப்பவர்கள் 6 பேரும் சுகாதாரப் பிரிவில் அடஙகியுள்ளனர். ஆக துப்புரவு தொழிலாளர்கள் எண்ணிக்கை 152 ஆகும்.

## 18 விளம்பரம்:-

காலரா தடுப்பு மற்றும் பெரியம்மை காசநோய் போன்ற தொற்று நோய்கள் தடுப்பு சம்மந்தமாக பிரச்சார அறிக்கைகள் நகரின் எல்லாப் பகுதிகளும் விநியோகிக்கப்பட்டது. திரைப்பட அரஙகுகளில் சிலைடுகள் மூலமாக பொது சுகாதாரம் தொற்று நோய்கள் பற்றியும் நாடு தழுவிய நோய்த்தடுப்பு மற்றும் குடும்ப நல்வாழ்வு, பிறப்பு இறப்பு பதிவு சம்மந்தமாகவும் பொது மக்கள் புரிந்துக் கொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டது. நகரில் முக்கியமாக சிற்றுண்டி விடுதிகள். தேனீர் விடுதிகள், மற்றும் தஙகும் விடுதிகள் மற்றும் அபாயமும் அருவருப்பும் தரும் தொழில்கள் நடைபெறும் இடஙகள் அனைத்தும் அவ்வப்போது பார்வையிட்டு சுகாதாரம் நல்லமுறையில் கடைப்பிடிக்க ஆவன செய்யப்பட்டது.

## 19) பிறப்பு மற்றும் இறப்பு மகப்பேறு:-

அறிக்கை ஆண்டில் 1247 பிறப்புகளும், சென்ற ஆண்டில் 1211 பிறப்புகளும் பதிவாகியுள்ளது. இந்நகராட்சியில் தாய் சேய் நல விடுதியில் போதிய பயிற்சி பெற்ற 4 தாய் சேய் நல உதவியாளர்களும், 2 ஆயாவும் பணியா.றி வந்தனர். அவர்களால் கவனித்த பிறப்பு 89 ஆகும். இது சென்ற ஆண்டில் 75 ஆக இருந்தது. இறந்து பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை ஏதும் இல்லை எல்லா பிறப்பு இறப்புகளும் 3 துப்புரவு ஆய்வராலும் 01.04.2010 முதல் 31.03.2011 முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. அறிக்கை ஆண்டு இறுதியில் கணக்கிடப்பட்ட மக்கள் தொகையின்படி பிறப்பு விகிதம் 19 இறப்பு விகிதம் 4.09 அறிக்கை ஆண்டில் 262 இறப்புகளும் பதிவாகியுள்ளது.

## கொசுக்கப்பட்டுபாடு:-

இந்நகராட்சியில் நகர்புற கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் 6 பணியாளர்கள் ஒரு களப்பணி உதவியாளர் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் 6 கைத்தெளிப்பான்களைக் கொண்டும் ஒரு புகை மருந்து தெளிப்பான் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் முதிர்கொசு ஒழிப்புப் பணிகளை செய்யப்பட்டது.

## இறப்புகள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | காய்ச்சல் | .. | – |
| 2 | வயிற்று போக்கு | .. | – |
| 3 | சீதபேதி | .. | – |
| 4 | காசநோய் | .. | – |
| 5 | மூச்சு பை சம்மந்தப்பட்டவைகள் | .. | 20 |
| 6 | புற்று நோய் | .. | – |
| 7 | நீரிழிவு வியாதி | .. | 25 |
| 8 | இருதய வியாதி | .. | 82 |
| 9 | டெட்னஸ் | .. | – |
| 10 | தற்கொலை | .. | |
| 11 | கர்ப்பிணி தாய்மார்கள் இறப்பு | .. | |
| 12 | காலரா | .. | |
| 13 | அம்மை | .. | |
| 14 | பிளேக் | .. | |
| 15 | மஞ்சள் காமாலை | .. | |
| 16 | வெறி நாய் கடி | .. | |
| 17 | பாம்பு கடி | .. | |

| | | | |
|---|---|---|---|
| 18 | மற்றவைகள் | .. | 135 |
| 19 | வயோதிகம் | .. | |
| 20 | வாத நோய் | .. | |
| 21 | விபத்து | .. | |
| | மொத்தம் | .. | 262 |

## பெரியம்மை

இந்த ஆண்டு நகரத்தில் அம்மை நோய் ஏதும் பரவவில்லை, கொள்ளை நோய் இல்லை

## உரக்கிடஙகு

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு இறுதியில் கையிருப்பு உரம் | .. | இல்லை |
| 2 | பக்குவம் அடைந்த உரம் | .. | குப்பை மட்டும் உள்ளது |
| 3 | பக்குவம் அடையாத உரம் | .. | இல்லை |

நடப்பு ஆண்டில் உரகிடஙகு பணியாளர்கள் மற்றும் இந்த தலைப்பின் கீழ் செலவு ரூ.4,88,400.00 ஆகும். நகராட்சி உரக்கிடஙகில் 3 துப்புரவுப் பணியாளர்களும் ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளரும் பணிபுரிகின்றனார்.

## நலத்திட்டஙகள்

இந்நகராட்சியில் அரசு நலத்திட்டஙகளில் இரு போலியோ முகாம்கள் நடத்தப்பட்டு முறையே 6905 (மற்றும்) 7299 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழஙகப்பட்டது.

நகரில் யாணைக்கால் நோயைக்கட்டுப்படுத்தும் பொருட்டு நகரில் உள்ள 33 வார்டுகளிலும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு யாணைக்கால் நோய் தடுப்பு மாத்திரைகள் வழஙகப்பட்டது.

இவ்வாண்டில் இந்நகராட்சியில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் ரூ. 31,32,000.00–க்கு தகுதி வாய்ந்த கர்ப்பிணிகளுக்கு வழஙகப்பட்டது.

## உணவு கலப்பட மாதிரி எடுத்தல்:-

உணவுக்கலப்பட மாதிரிகள் 48 வருடாந்திர இலக்காக பொது சுகாதார இயக்குநர் நிர்ணயித்ததில் அறிக்கை ஆண்டில் உணவு கலப்படம் பரிசோதனை செய்ய பயிற்சி பெற்ற உணவு ஆய்வர்கள் இல்லாததால் உணவு மாதிரிகள் எடுத்து தஞ்சாவூரில் உள்ள அரசினர் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பவில்லை. உணவு கலப்பட மூலம் விதியின்கீழ் லைன்ஸ்கள் வழஙகியதின் ரூ. 11,570.00வருவாய் வந்துள்ளது.

## ஈ) அபாயகரமானதும் அருவருக்கத்ததுமான உள்ள தொழில்கள்:-

எல்லா அபாயகரமானதும், அருவருப்பு தரக்தக்கதுமான தொழில்களுக்குரிய அனுமதி கட்டணம் மற்றும் உணவு கலப்பட தொழில் நடத்த கட்டணம் செலுத்தி தொழில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. விற்பனை பொருள்களுக்கும் இடத்திற்கும் தகுந்தார்போல் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. விற்பனை நிலையஙகளையம், நிறுவனஙகளையும் பொது நலத்துறை அலுவலர்கள் அடிக்கடி பார்வையிட்டு வந்தார்கள். இவவினஙகளுக்கு 472 உரிமையாாணகள் வழஙகியதின் மூலம் நடப்பு ஆண்டில் 1,95,811/– வருவாய் கிடைத்துள்ளது.

## 20) துப்புரவு:-

இந்நகரில் 20 பொது கழிவறைகள் உள்ளன, அவைகளில் 132 மல அறைகள் கொண்டதாக உள்ளது. அனைத்தும் செப்டிக் டேஙக் கழிவறைகள் ஆகும் பேருந்து நிலையத்தில் சிறுசீர் கழிப்பிடஙகள் கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது.

## வீட்டு கழிவறைகள் சுத்தம் செய்தல்

அறிக்கை ஆண்டில் நகரில் இருந்த மொத்த குடியிருப்பு வீடுகள் 12834 அதில் கழிவறைகள் வசதிகள் உள்ள வீடுகள் 10866 மேற்கூறிய குடியிருப்பு வீடுகளில் மொத்த கழிவறைகள் வசதியுள்ள வீடுகளின் எண்ணிக்கை 85% சதவிகிதம் ஆகும். உலர் கழிப்பிடஙகள் இல்லை எனவே வீட்டு கழிவறைகள் நகராட்சி மூலம் சுத்தம் செய்யப்படுவதில்லை.

## 21) <u>கழிவுநீர் திட்டம்:-</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான 8 ஏக்கர் 96 செண்ட் பரப்பளவு நிலம் கழிவுநீர் பண்ணையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் பல பகுதிகளிலிருந்த அப்புறப்படுத்தப்படும் கழிவநீரை வீணாக்காமல் மேற்படி பண்ணையில் பாய்ச்சப்பட்டு பாரா கிராஸ் புல்லும் பயிர் செய்யப்பட்டு வந்தது.

## 22) <u>நகர பொது சுகாதாரமும் இதர இனஙகளும்:-</u>

நகராட்சி துப்புரவு தொழிலாளர்கள் குடியிருப்பு வசதிக்காக 52 வீடுகள் அமைக்கப்பட்டிருகின்றனது. இவ்வாறு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படாத தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை அரசு அனுமதிக்கும் தொகையை வழஙகப்படுகிறது. மேலும் எல்லா துப்புரவ தொழிலாளர்களுக்கும் சீருடைகள் மற்றும் பாலனிகள் வழஙகப்பட்டது. சீருடைகள் சுத்தம் சய்து கொள்வதற்காக சீருடை படியாக ரூ. 60.00 வீதம் வழஙகப்பட்டு வருகிறது. மருத்துவபடி ரூ. 100/—ம் தூசிப்படி ரூ. 20/—ம் துப்பரவுப்படி ரூ. 14/— பிரதி மாதமும் வழஙகப்பட்டு வருகின்றனது. மேலும் அவர்கள் குடியிருக்குமிடத்தில் தண்ணீர் வசதிக்காக கிணறும் குடி தண்ணீர் குழாய் ஒன்றும் அமைக்கப்பட்டு உள்ளது. மின் விளக்கு வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

### அ) <u>தீத்தடுப்பு</u>

நகராட்சி அலுவலகத்தில் தீத்தடுப்பு சாதணஙகள் இரண்டும் சுகாதார அலுவலகத்தில் ஒன்றும் அவசர தேவைக்காக பொருத்தப்பட்டு இருக்கிறது. அரசாஙக தீயணைப்பு நிறுவனம் ஒன்று இந்நகரில் முக்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 23) <u>குடிநீர் திட்டம்:-</u>

அரசினரால் ஒப்புதலளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்ட ஆரம்ப மதிப்பீட்டுத் தொகை ரூ. 648.00 லட்சம் ஆகும். ஆனால் இதுவரையில் செலவு செய்த தொகை ரூ.780.81 இலட்சம் ஆகும்.

இதற்காக அரசிடமிருந்து 31.03.2011 வரை ரூ.583.20 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர் நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கு செலுத்தப்பட்டு மேற்படி டிபணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசிடமிருந்து பெற்ற கடன் தொகைக்கு அறிக்கையாண்டில் ரூ 571134../– அசலுக்காக தவணை செலுத்தப்பட்டுள்ளது எல்லா தெருக்களுக்கும் ஒரு சில தெருக்கள் தவிர குழாய்கள் மூலம் குடிநீர் விநியோம் பின்வரும் நீர்தேக்க தொட்டிகளிலிருந்து செய்யப்படுகிறது. சேர்மன் துரைசாமியார் ரோடில் மேல்நிலைப்பள்ளிக்கு அருகாமையில் உள்ள டவுன் சர்வே எண் 339/57–ல் காலியிடத்தில் 11.35 லட்சம் லிட்டர் கொள்ளவு உயர்நிலை நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் பழனிசாமியார் ரோட்டில் டவுன் சர்வே எண் 16–ல் தூய நெஞ்சக் கல்லூரி எதிரில் உள்ள காலியிடத்தில் 2.5 லட்சம் லிட்டர் கொள்ளவு உள்ள நீர்த்தேக்க தொட்டி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. 2001–ல் கௌதமபேட்டையில் 10.00 லிட்டர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. மேலும் 2008–2009–ல் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் பாலம்மாள் காலனியில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு தொட்டி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

## 24) குடிநீர் கட்டணஙகள்

அறிக்கை ஆண்டில் இந்த தலைப்பின் கீழ் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 47.14 லட்சம் ஆகும். தற்போது 90 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் அமைக்கப்பட்டு நீர் இறைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. இதனால் எல்லாப் பகுதிகளுக்கும் தடையின்றி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. நகரில் உள்ள இணைப்புகள் பெறாத எல்லா வீடுகளுக்கும் இணைப்புகள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்து.

| | | |
|---|---|---|
| 2009–2010 வரை | .. | 6214 |
| 2010–2011 வரை | .. | 248 |
| மொத்தம் | .. | 6462 |
| ஏற்கனவே உள்ள பொதுக் குழாய்கள் | .. | 96 |
| 2008–2009–ம் ஆண்டு பொது குழாய்கள் இலவச இணைப்புகள் | .. | 96 |

## 25) இலாபகரமான இனங்கள்

இந்நகராட்சியில் பராமரித்து வரும் நிரந்தரக் கடைகள் 365, பங்க் கடை எண்–7, மற்றும் காலியிடங்கள் 3 ஆக மொத்தம் 375 கடைகளும் மற்றும் உணவகம் 2–ம் உள்ளது அவைகளின் மூலம் பின்வருமாறு வருமானம் கிடைத்தது.

| வ.எண் | கடையின் பெயர் | 2009–2010 | 2010–2011 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | சேர்மன் குள்ளப்பனார் வர்த்தக நிலையம் (காலியிடம் சேர்த்து) | 402256.00 | 402256.00 |
| 2 | நகராட்சி பழைய பேருந்து நிலைய கடைகள் | 684673.00 | 684673.00 |
| 3 | பழைய பூ பழ அங்காடி | 105730.00 | 105730.00 |
| 4 | புதிய பூ பழ அங்காடி | 98970.00 | 331141.00 |
| 5 | சி.எம்.எஸ். மார்க்கெ. | 89970.00 | 98970.00 |
| 6 | பங்க் கடைகள் | 69307.00 | 69307.00 |
| 7 | ராஜன் தெரு கடைகள் | 36470.00 | 36470.00 |
| 8 | காயிதே மில்லத் அங்காடி | 1262436.00 | 1361466.00 |
| 9 | புதிய வணிக வாளகம் | 2000543.00 | 2069862.00 |
| 10 | புதிய பேருந்து நிலைய கடைகள் | 1526804.00 | 1733564.00 |
| 11 | பாரதியார் அங்காடி | 404325.00 | 404325.00 |
| 12 | தற்காலிக தினசரி காய்கறி கடைகள் | வழக்கில் உள்ளது | வழக்கில் உள்ளது |
| 13 | பழைய பேருந்து நிலைய புதிய கடைகள் | 247638.00 | 260020 |
| 14 | வாரச்சந்தை கடைகள் | 456289.00 | 521647 |
| 15 | வைத்தியர் சென்னமூர்த்தி தெரு மற்றும் புதிய பேருந்து நிலைய வடக்குப்புற கடைகள் | 3392140.00 | 3526593 |
|  | மொத்தம் | 11018722.00 | 11606024 |

## 26) போக்கு வரத்து :-

இந்நகர மன்றத்திற்கு சொந்தமான லாரியோ, பஸ் போக்கு வரத்தோ, இல்லை எந்த பஸ் ரூட்டும் எடுத்து நடத்தவில்லை.

## 27) சந்தை பேருந்து நிலையங்கள் முதலியன:-

| வ.எண் | இடத்தின் பெயர் | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வாரச்சந்தை | 75000 | 81300 | 113000 | 34965 (துறை மூலம் வசூல்) |
| 2 | தினசரி மார்க்கெட் | 2247000 | 2496397 | 3125000 | 3280050 |
| 3 | பேருந்து நிலையம் (IDSMT) | 1091457 | 1203345 | 1211777 | 1270566 |
| 4 | நவீன ஆடு அடிக்கும் தொட்டி | 62555 | 68200 | 148000 | 154800 |
| 5 | மாடு அடிக்கும் தொட்டி | 20200 | 21000 | 21800 | 23227 |
| 6 | சாலை மரஙகள் வசூல் தொகை | 5300 | 2500 | 3050 | 3203 |
| 7 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (பழையது) | 366435 | 385776 | 180400 | 206640 |
| 8 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (புதியது) | 1368755 | 1380786 | 1450555 | 1523083 |
| 9 | எடை பார்க்கும் கருவி | 19100 | 19700 | 19750 | 20738 |
| 10 | நகராட்சி கழிவுநீர் புல் பண்ணை | 35800 | – | – | – |
| 11 | மிதி வண்டி நிலையம் | 655443 | 815888 | 835777 | 877566 |
| 12 | ஒலி பெருக்கி விளம்பரம். | 25500 | 39000 | 40600 | 42630 |
| 13 | வாரச்சந்தை வளாக கட்டண கழிப்பிடம் | – | – | – | 38100 |
| | | | | | |
| | மொத்தம் | 5972545 | 6513892 | 7149709 | 7475568 |

## 28) பேருந்து நிலையம்:-

மத்திய ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ஐ.டி.எஸ்.எம்.டி) அரசிடமிருந்து கடன் பெற்று (1) நகர புல எண் 500 மற்றும் 501/2 வார்டு எண்–2, பிளாக் எண் 8–ல் முதல் கட்டமாக “ பி ” வகுப்பு பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்ட ரூ.41 லட்சம் மதிப்பீட்டிற்கும் (2) நகர புல எண் 15/2ஏ, வார்டு எண்–1, பிளாக் எண்–3, புதிய வாரச்சந்தை கட்ட ரூ.25 லட்சம் மதிப்பீட்டிற்கும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தம்முடைய செயல்முறைகள் ந.க.எண் 51885/90/யிபி2, நாள் 05.10.1991–ல் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள விவரப்படி கடைகள் கட்டி முடிக்கப்பட்டன. (ந.க.எண் 11239/91/இ1).

1) புதிய பேருந்து நிலையத்தில் முதல் கட்டணமாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் இதர கட்டிடஙகள் விபரம் பின்வருமாறு இவைகள் 12.03.1995 முதல் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1 | கடைகள் (10’ X 10’ அளவு) | .. | 28 |
| 2 | பெண்கள் தஙகுமிடம் (20’ X 10’ அளவு) | .. | 1 |
| 3 | ஆண்கள் தஙகுமிடம் (20’ X 10’ அளவு) | .. | 1 |
| 4 | உணவகம் (40’ X 18’ அளவு) | .. | 1 |
| 5 | பொருள்கள் வைப்பறை (10’ X 10’ அளவு) | .. | 1 |
| 6 | பேருந்து கட்டண வதிவறை (10’ X 10’ அளவு) | .. | 1 |
| 7 | கட்டண கழிப்பிடம் (ஆண்கள்–8, பெண்கள்–3) | .. | 1 |
| 8 | குளியல் அறை (ஆண்கள்–2, பெண்கள்–3) | .. | 1 |

2) வாரசந்தை கடைகள் விபரம் இவைகள் 23.05.1994 முதல் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

நிரந்தர கடைகள் (15’ X 10’ அளவு) .. 20

திறந்தவெளி கடைஎண் (15’ X 10’ அளவு) .. 84

## 29) நில அபிவிருத்தி:

அ) நகர் அமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் நகரமைப்பு அலுவலர் ஒருவரும் நகரமைப்பு ஆய்வர் ஒருவரும், சஙகிலியாள் ஒருவரும் அனுமதிக்கப்பட்ட

பணியாளர்களாகும். மேற்படி பிரிவிற்கான நடப்பு ஆண்டின் மொத்த செலவு தொகை ரூ. 517566/– ஆகும்.

அரசினரால் 25.06.75–ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் 1232 எண்ணிட்ட ஆணைப்படி இந்நகராட்சியில் உள்ளூர் திட்ட அதிகாரக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி குழு அறிக்கை ஆண்டில் மூன்று முறை கூடி ஐந்து பொருள்கள் மீது தீர்மானஙகள் நிறைவேற்றின.

## திருப்பத்தூர் நகராட்சி – நகரமைப்பு

இந்நகராட்சியில் மூன்று விரிவு நகரமைப்புத் திட்டஙகள் உள்ளன. அவற்றின் விபரம் பின்வருமாறு.

1) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 1 (ஆரிச்செட்டி தெரு நகரமைப்புத் திட்டம்)
2) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 2 (புதுப்பேட்டை ரோடு தெற்கு நகரமைப்புத் திட்டம்)
3) விரிவு அபிவிருத்தி திட்டம் எண் – 3 ( சாம நகர் நகரமைப்புத் திட்டம்)

### 1) விரிவு அபிவிருத்தி திட்டம் எண்–1

மேற்படி அபிவிருத்தி திட்டம் இடஙகளின் பரப்பளவு 64 ஏக்கர் 60 செண்ட் அல்லது 25.16 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை பல்வகை எண் 158 நாள் 17.01.56–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் 01.08.1978–ம் தேதிய உத்திரவு எண் 1937–ன்படி இத்திட்டம் தயாரிக்கப்பட்டு 31.03.1983–ம் தேதி வரை காலக்கெடு கொடுத்து 1971–ம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 29–வது பிரிவின்படி மேற்படி திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 54540/94–டிபி3, நாள் 10.01.1995–ல் அஙகீகரிக்கப்பட்டு வரைபடம் 4–க்கு D.D.P. (V.R.) DTCP NO.3/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## 2) விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்–2

மேற்படி அபிவிருத்தித் திட்ட இடஙகளின் பரப்பளவு 63 ஏக்கர் அல்லது 25.51 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை பல்வகை எண் 158 நாள் 17.01.1956–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1971–ம் வருடம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 25–வது பிரிவின்படி ந.க.எண் 4270/94–டிபி3, நாள் 11.03.1994–ல் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடமிருந்து இணக்கம் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 5452/94–டிபி3 நாள் 24.01.1995–ல் அஙகீகரிக்கப்பட்டு வரைபடம் 4–க்கு D.D.P. (V.R.) DTCP NO.3/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## 3. விரிவு அபிவிருத்தித் திட்டம்–3

மேற்படி அபிவிருத்தித் திட்ட இடஙகளின் பரப்பளவு 27.37 ஏக்கர், அல்லது 11.09 ஹெக்டேர் ஆகும். இத்திட்டம் அரசாணை எண் 2889 நாள் 22.09.1958–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 1971–ம் வருட தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 29–வது பிரிவின்படி மேற்படி திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 54543/94–டிபி3 நாள் 24.01.1995–ல் அஙகீகரிக்கப்பட்டு வரைபடம் எண் 4–க்கு D.D.P.(V.R)DTCP No. 6/95 என எண்ணிடப்பட்டுள்ளது.

## முழுமைத்திட்டம்

இந்நகராட்சி முழுமைத்திட்டத்திற்கு அரசாணை எண் 1028 நாள் 05.12.1984–ல் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையில் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முழுமைத்திட்டத்தின் மீது பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் பெற 21.08.1985–ம் தேதி தமிழ்நாடு அரசிதழிலும் 23.12.1985–ம் தேதி தினத்தந்தி இதழிலும் 05.01.1986–ம் தேதிய வடாற்காடு மாவட்ட அரசிதழிலும் பிரசுரம் செய்யப்பட்டு உள்ளது. பிறகு மேற்படி முழு திட்டத்தினை அரசு ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் மூலமாக அனுப்ப உள்ளூர் திட்ட குழுமத் தீர்மான எண் 24 நாள் 29.09.1986–ல்

சில மாற்றஙகள் செய்ய கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை நகர் ஊரமைப்பு இயக்குநர், தனது 14.09.19987 தேதிய ந.க.எண் 7100/95–ம் தேதியில் அஙகீகரித்துள்ளார். மேலும் இரு நபர்களிடமிருந்து வரப்பெற்ற ஆட்சேபணைகளை ஏற்று உள்ளுர் திட்டக் குழுமத் தீர்மான எண் 51 நாள் 27.11.1987–ல் அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானித்தது. அதனை தொடர்ந்து அரசின் இறுதி அனுமதிக்காக நகர் ஊரமைப்பு இயக்குநர், மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்கள் மூலமாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 8117/85/எப்1, நாள் 28.01.1988–ல் முழுமைத்திட்ட அறிக்கைகள் அனுப்பப்பட்டு பின்பு அரசாணை எண் 21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் 05.01.1990–ல் முழுமை திட்டத்தை அஙகீகரித்துள்ளது. அஙகீகரிக்கப்பட்ட மேற்படி முழுமைத் திட்டத்தை மாவட்ட அரசிதழில் 28.02.1991–ல் விளம்பரம் செய்யப்பட்டது. மீண்டும் அரசாணை எண் 168–ல் நாள் 09.04.1999–ல் மறு ஆய்வு திட்டம் இணக்கம் அளிக்கப்பட்டது. 06.08.1999 நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. 01.12.1999–ல் அரசிதழிலும், ஜனவரி 2000–ல் வேலூர் மாவட்ட அரசிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது இறுதி ஒப்புதலுக்காக ந.க.எண் 2523/98/எப்1, நாள் 02.02.2000–ல் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## <u>நகர் அளவு</u>

இந்நகராட்சியில் விரிவாா நகர் அளவு சர்வே 1897–ல் ஆண்டு முடிக்கப்பட்டுள்ளது. நகர் அளவு சம்மந்தப்பட்ட வரைபடஙகள் முதலிய தஸ்தாவேஜிக்கள் இரண்டு நகல்கள் நகரளவரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் எந்தப் பகுதியும் புதியதாக சேர்க்கப்பட்டவோ அல்லது நீக்கப்படவோ இல்லை.

நகரளவர் ஒருவரும், சஙகிலி ஆட்கள் இருவரும் அறிக்கை ஆண்டில் பணியில் இருந்ததால் மேற்படி பணியாளர்களின் சம்பளப்படி வகையாறாக்களும் செலவில் 3–ல் இரண்டு பஙகு நகராட்சியிலிருந்து செலுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் விரிவான நகரளவு சர்வே (துணை நகரளவை) 2002–ம் ஆண்டு முடிக்கப்பட்டு, புதிய சர்வே ஆவணஙகள் வரைபடஙகள் மெட்ரிக் (மீட்டர்) முறையில் மாற்றப்பட்டு, 01.04.2003–ல் ஒரு நகலில் நகர அளவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## அ. கட்டணஙகள் (அரை ஆண்டு 1–க்கு)

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது காரியஙகளுக்கு | .. | 1. 1/8 சதவிகிதம் |
| 2 | கக்கூஸ் வரி | .. | 2. ¾ சதவிகிதம் |
| 3 | நீரளிப்பு சாக்கடை வரி | .. | 6.00 சதவிகிதம் |
| 4 | விளக்கு வரி | .. | 3.00 சதவிகிதம் |
| 5 | கல்வி வரி | .. | 2. 1/2 சதவிகிதம் |
| 6 | மொத்தம் | .. | 15. 3/8 சதவிகிதம் |

## அரையாண்டிற்கு மொத்த வரி விகிதம்

## ஆ) காலிமனை (அரை ஆண்டு 1–க்கு)

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது | .. | 4. 1/2 சதவிகிதம் |
| 2 | கக்கூஸ் வரி | .. | 1. 16 சதவிகிதம் |
| 3 | வரி விளக்கு வரி | .. | 1 / 8 சதவிகிதம் |
| 4 | நீரளிப்பு சாக்கடை | .. | 1 / 8 சதவிகிதம் |
| 5 | அரையாண்டு 1–க்கு மொத்த வரி விகிதம் | .. | 5 1/8 சதவிகிதம் |

இது தவிர சொத்து வரியின் பேரில் ரூ. 1–க்கு 0.10 பைசா வீதம் நூல் நிலைய கட்டணம் வசூலிக்கப்பட்டு உள்ளூர் நூலக குழு அலுவலருக்கு செலுத்தப்படுகிறது.

வண்டி வாகன வரி, தொழில் வரி இவைகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சகளின் சட்டம் 1920–ல் குறிப்பிட்டுள்ளபடி அதிக பட்ச வரி விதிக்கப்பட்டுள்ளது.

## 30) மக்கள் தொகையின் பேரில் வரி விகிதம்

சொத்துவரி நடப்பு ஆண்டில் மக்கள் தொகையில் தலா ரூ.386.03 மொத்தம் வரி விதிக்கப்பட்ட கட்டிடஙகளின் எண்ணிக்கை 13994 தொழில் வரி விதிக்கப்பட்ட வரி எண்ணிக்கை 1419 ஆக நடப்பு ஆண்டில் இருந்தது.

## 31) நடப்பு ஆண்டில் வரி வகையில் மொத்தமாக கேட்பு தொகை வரவு நிலுவை விபரம் கீழ்வருமாறு 2010–2011

| இனஙகள் | கேட்புத் தொகை | வரவு | தள்ளுபடி செய்தது | நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| வரிவகை இனஙகள் | 413.65 238.20 | 210.17 | – | 203.48 |
| வரியில்லா இனஙகள் | | 171.65 | – | 66.55 |

## 7) நிதி நிலைமை

## 32) பொது:

## 1) வரவு செலவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப கையிருப்பு | .. | 15520177.00 |
| 2 | வரவு | .. | 90816000.00 |
| 3 | மொத்தம் | .. | 106336177.00 |
| 4 | மொத்த செலவு | .. | 97160000.00 |
| 5 | ஆண்டு முடிவில் கையிருப்பு | .. | 9176177.00 |

## 33) முதலீடுகள்

## அறிக்கை ஆண்டில்

| | | | |
|---|---|---|---|
| 1 | கல்வி நிதியில் | ரூ. 40,00,000 இலட்சம் | பாரத மாநில வஙகி திருப்பத்தூர் முதலீடு செய்யப்பட்டது. |

## 34) தேசிய சேமிப்புத் திட்டம்

அறிக்கை ஆண்டி. இந்நகராட்சிக்கு ரூ. 300.00 லட்சம் குறியீடு சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டது. அதில் ரூ. 90.00 லட்சத்திற்கு பொது மக்களிடமிருந்து கணக்குகள் ஆரம்பித்து செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அதை தவிர நகராட்சி அனைத்து ஊழியர்களும் தேசிய திட்டமாகிய இந்த சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. அனைத்து ஊழியர்களின் சேமிப்பும் மேறப்டி தொகையில் அடஙகும்.

## 35) பொதுக் குறிப்புகள்

அறிக்கை ஆண்டில் நகர்மன்ற தலைவர் அவர்களால் கூட்டப்பட்ட மன்ற கூட்டத்தின் முன் வைக்கப்பட்ட எல்லா பொருள்களும் தடையின்றி நிறைவேற்றப்பட்டது.

## பள்ளி குழந்தைகள் சத்துணவு திட்டம்

தமிழ்நாடு அரசு சத்துணவு திட்டம், நகராட்சி ஆரம்ப பாடசாலையில் படித்து வரும் 5 வயது முதல் 9 வயது வரையிலான பள்ளி குழந்தைகளுக்கு சத்துணவு வழஙகும் திட்டம் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 07.09.1982–ம் தேதிய 1379 எண் அரசு ஆணைக்கேற்ப இந்நகராட்சியில் 15.09.1982 முதல் அமுல் செய்யப்பட்டு 11 மையஙகள் நகராட்சி ஆரம்ப பாட சாலைகளில் நடைபெற்று வருகின்றது. இந்நகராட்சியில் அரசு மான்யத்தின் மூலம் அறிக்கை ஆண்டில் 10 நிரந்தர சமையல் கூடம் வசதிகளுடன் இருக்கிறது. ஒரு சத்துணவு மையம் வாடகை கட்டிடத்தில் நடைப்பெற்று வருகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் அமைப்பாளர் ஒருவரும் சமையல் செய்பவர் ஒருவரும் உதவியாளர் நியமிகிக்பபட்டு நல்ல முறையில் நடைப்பெற்று வருகின்றன. மேற்படி திட்டத்திற்கு அறிக்கை ஆண்டில் ரூ.15,70,172.00 சம்பளமாகவும், ரூ.1.26.826.00 செலவினம் உணவுச் செலவுக்காவும், மொத்த செலவு ரூ.16,96,998.00 ஆகும். அதன் செலவினம் அரசிடமிருந்து மானயமாக பெறப்பட்டது.

சென்ற ஆண்டுகளைப் போலவே அறிக்கை ஆண்டிலும் சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிர்வாகம் சுமுகமாக நல்ல முறையில் நடக்க தொடர்ந்து ஒத்துழைப்பும், ஆலோசனையும் அவ்வப்பொழுது வழஙகிய நகராட்சி அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு நிர்வாக அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

ஆணையர்,
திருப்பத்தூர் நகராட்சி